## 18K4HELO2 - PANCHYAT RAJ WITH SPECIAL REFERENCE TO TAMIL NADU

### B.A - HISTORY : II YEAR - NME

# B.A. HISTORY

**SEMESTER IV**

**NME2**

**PANCHYAT RAJ WITH SPECIAL REFERENCE TO TAMIL NADU**

**Code No: 18K4HELO2**
**Hours: 2**
**Credit:2**

**UNIT - I:**

Concept of Panchayat Raj – Self – Governing Villages in Tamilnadu –Local Self Government During the Chola Period– Local Self – Government Under the British

**UNIT- II:**

Mahatma Gandhi's concept of Panchayat Raj – Vinobhaji's Views on Panchayat Raj Gramadhan and Boomidhan Movement –Balwantra Ray Metha's Committee, Ashok Metha's Committee – Madras Panchayat Act (1958).

**UNIT- III:**

Panchayat Administration:BDO and Extension Officials Grama Seva - Panchayat Development Under Five Year Plans.

**UNIT - IV:**

Provisions of Tamil Nadu Panchayat Raj Act,1994 – Panchayat Raj Election's (1996-2001) Performance

**UNIT- V:**

Women and Panchayat System in Tamil Nadu - Role of Women in Panchayat Raj –SHG Empowerment of Women.

**Books for Reference:**


1. Sachdheva and Durga – Simple Study of Local Self Government in India
2. S.R.Maheswari and SriRam Maheswari - Local Government in India
3. States of Panchayat Raj in the states and Union Terractories of India ,2000,
4. New Delhi, Institute of Social Sciences, 2000.
5. New Panchayat RajAct-1994 – Pass it in TamilNadu Govt Three System – Powers of President Council members – Power of Panchayat Union Chairman – Dist Panchayat - Panchayat election in 1996 at 2001 – and its implication.

## அலகு - ஒன்று, இரண்டு, மூன்று


**பஞ்சாயத்து ராஜ்** என்பது உள்ளாட்சி அமைப்புகளின் தாங்களின் தேவைகளை வளர்ச்சியை திட்டமிட்டு நிறைவேற்றி கொள்ளும் சட்ட அமைப்பு ஆகும். ராஜிவ் காந்தி அவர்களால் உருவாக்கப்பட்டது.இந்திய அரசயலமைப்பு சட்டம் 73,74,திருத்தங்களால் பஞ்சாயத்து ராஜ் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூன்று அடுக்களுடன் கூடியது.

1. மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சியும்
2. வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியம் மற்றும்
3. கிராம அளவில் கிராம ஊராட்சிகள் கொண்டுள்ளது.

- சோழர் கால உத்திரமேருர் கல்வெட்டு மூலம் குடவோலை முறையின் மூலம்தேர்வு செய்து கிராம சபை, மற்றும் வாரியம் பற்றியும், 1884 இல் ரிப்பன் பிரபு காலத்தில் தல சுய ஆட்சி திட்டம் மூலம் பஞ்சாயத்து சட்டம் பற்றி அறிய முடிகிறது.

- கிராமம்,ஒன்றியம்.மாவட்ட.அளவில் அதிகார பரவல் உள்ளது. 1/3பங்கு உறுப்பினர்கள் பெண்களாக இருப்பர். கிராமம்,ஒன்றியம்,மாவட்டம் என முன்றடுக்கு கொண்டது. நகர் பாலிகா பேருராட்சி,நகராட்சி,மாநகராட்சி என முன்றடுக்கு கொண்டது. 29 வகையான நலத்திட்டங்களை ஆற்ற உரிமை உள்ளது. கிராமசபை ஆண்டிற்கு நான்கு முறை கூட்ட வேண்டும்.
- சாலை வசதி,குடிதண்ணிர்,தெருவிளக்கு,சுகாதாரம்,கல்வி, நூலகம், துப்புரவு,பூங்கா, பதாள சாக்கடை போன்ற பராமரிப்பு பணிகளை செய்கின்றன. கிராம சபை கூடி வரவு செலவு ,திட்டம் பற்றி விவாத்தல். மத்தியுமாநில நிதிப்பெற திட்டம் தாயரித்தல்.
- 5 உறுப்பினர்களை கொண்டது.நிதிக்கொள்கைநிதிஆதாரம்,நிதிபங்கீடுபோன்ற ஆலோசனை வ்ழங்குதல்.
- வீட்டு வரி,கேளிக்கை வரி,தொழில் வரி,சொத்துவரி,குடிநீர் வரி,விளம்பர வரி,வசூலித்தல் மத்திய,மாநில அரசு நிதி அளிப்பு
- உள்ளாட்சி அமைப்பு க்களை ஆய்வு செய்ய கண்காணிக்க,மற்றும் சட்ட விரோதப் போக்கு, குற்றப்பின்னனி போன்ற நேரங்களில் தலைவரை நீக்க அதிகாரம் உண்டு.




## கிராமப்புறங்களில் தல சுய ஆட்சி

### பஞ்சாயத்து சபை

நகரங்கள், பேரூர்கள் இவைகளில் மட்டும் தல சுய ஆட்சியை நிறுவினால் போதாது. இந்திய மக்கள் தொகையின் எழுபது விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இம்மக்கள் நிர்வாக முறையில் எதுவும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றால் தல சுய ஆட்சி முறையின் குறிக்கோளே முழுமை பெறாமல் வீணாகிவிடும். எனவே இம்மக்கள் தங்கள் நலனைத் தாங்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வழிமுறைகளைக் கொண்டுவர வேண்டும்.

காந்தி அடிகள் போன்றோர் விரும்பிய பொருளாதார நிலையில், செழுமை அப்போதுதான் ஏற்படும். மேலும், சுய ஆட்சி முறைக்குத் தேவையான பயிற்சியும் அவர்களுக்குக் கிடைக்கின்றது. புதிய முறைகளைக் கொண்டு வருவதற்கான ஊக்கமும் நம்பிக்கையும் அவர்கள் பெறுகிறார்கள்.

இக் குறிக்கோள்களை மனத்தில் வைத்தே, இந்தியா சுதந்தரம் அடைந்ததும் பஞ்சாயத்து அரசு முறை எல்லாக் கிராமப்புறங்களிலும் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது பஞ்சாயத்து அரசு முறையே கிராமத்தின் மையமாக அமைந்துள்ளது.

இதனைக் கொண்டு வருவதற்கு முன் இந்தியத் தலைவர்களும், அரசாங்கமும் இதனால் என்னென்ன சிக்கல்களும், பிரச்சனைகளும் எழலாம் என்று அறிந்து கொள்வதற்காகப் பல குழுக்களை அமைத்தனர்.
இப்படிப்பட்ட கமிட்டிகளின் அறிக்கைகளை, சிபாரிசுகளை ஒட்டியும், சமூக வளர்ச்சி, கிராமப்புற அபிவிருத்தி திட்டங்களுக்காக உண்டான திட்டக்குழு போன்ற அமைப்புகளின் பயிற்சிகளை ஒட்டியும் ஒரு பரந்த அடிப்படை கொண்ட பஞ்சாயத்து அரசு அமைப்பு 1958ல் ஏற்படுத்தப்பட்டது.

1958 ஆம் ஆண்டு தொடங்கி அதற்குப் பிறகும் மாநில அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்களின் மூலம் இவ்வமைப்பு நடைமுறையில் இயங்க ஆரம்பித்தன. இருந்தும் பஞ்சாயத்து நிறுவனங்கள் எம் முறையில் இருக்க வேண்டுமோ அம்முறையில் இல்லை என்றும் நாட்டில் ஜனநாயகம் பலமான அடித்தளத்தை பெறவில்லை என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால், பஞ்சாயத்து நிறுவனங்கள், தொடர்ந்து பணி புரிவதையும் கிராம, சமூகப் பொருளாதாரப் புனரமைப்பிற்கு அவைகள் இன்றியமையாதவை என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

## தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து அரசு அமைப்பு

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அரசு முறை, தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958-ன்படி ஏற்படுத்தப்பட்டது. இந்த முறை கிராமப் பஞ்சாயத்து அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்கு மேலாகப் பஞ்சாயத்து ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் உள்ளன. இந்தப் புதிய அமைப்புமுறையில், மாவட்ட கழகங்கள் (Boards) அகற்றப்பட்டுப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் அவற்றின் வாரிசுகளாக ஆயின. பஞ்சாயத்து ஒன்றியத்தின் பரப்பளவு சமூக முன்னேற்றத் திட்டத்திலுள்ள அபிவிருத்தி பிளாக்குகளின் சம எல்லை அமைப்புகளாக அமைக்கப்பட்டன. கிராம மட்டங்களின் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களில் இருக்கின்றன. மேற்படி உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவரையும் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு முயற்சி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் அதன் அதிகாரத்திற்குட்பட்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களின் தலைவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து அரசு நிறுவனங்களின் அமைப்பைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்.

1. பஞ்சாயத்துக்கள் - (அ) கிராமப் பஞ்சாயத்துகள், (ஆ) நகரப் பஞ்சாயத்துகள்

2. பஞ்சாயத்து யூனியன்
3. மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்
4. மாநில மட்டத்திலுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள்:

மேற்கூறப்பட்ட அமைப்புகள் 1994 ம் ஆண்டு வரையும் அதற்கு பிறகு புதுச்சட்ட அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும் வரை வழக்கில் இருந்தன.

## தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அமைப்பு வளர்ந்த வரலாற்றில் முக்கியமானதொரு மைல் கல்லாகும். தல சுய ஆட்சி நடைமுறை தமிழ்நாட்டில் இதற்கு முன்பு எதிர்பார்த்த அளவிற்கு சிறப்பாக அமையவில்லை. எனவே தேசீய மட்டத்திலும், மாநிலங்கள் மட்டத்திலும் இவைகள் சிறப்பாக செயல்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று எல்லோரும் விரும்பினார்கள். நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய அரசியல் கட்சிகளும் பஞ்சாயத்து அமைப்பை பற்றி நன்றாக அறிந்திருந்தவர்களும் இக்கருத்தை ஆதரித்தார்கள், எனவே பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்கள் இந்த அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு 1985ம் ஆண்டு முயற்சி மேற்கொண்டார்கள். இருப்பினும் அவருடைய முயற்சிகள் அப்போது அவர் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை.
அவருக்குப் பிறகு தேசீய முன்னணியின் திரு.வி.பி.சிங் சட்டமியற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் வெற்றி பெறவில்லை. பிறகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு. பி.வி நரசிம்மராவ் அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த போது எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு 73-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 1992-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களில் 50 விழுக்காடு மாநிலங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது 1993-ம் ஆண்டு மே மாதம் நடைமுறை படுத்தப்பட்டது. இது ராஜிவ் காந்தி அவர்களின் கனவை நினைவாக்கியது என்று சொல்லலாம்.
இச்சட்டம் பஞ்சாயத்து அமைப்புகள் அவற்றின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை தீவிரமாக செய்து முடிப்பதற்கு உதவியாக இருந்தது. இச்சட்டம் பிற்காலத்தில பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட வகை செய்தது.
இந்திய கூட்டாட்சியிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தை நிறைவேற்றுவது கட்டாயமாக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது சட்டப்படியானது. ஏதேனும் ஒர் மாநிலம் இந்த சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்ற தவறினால் அதற்கு மைய அரசின் மானியங்கள் பெற தகுதி கிடையாது என்பது கட்டாயமாக்கப்பட்டது.
மக்களுடைய அன்றாட வாழ்வோடு தொடர்புடைய தெளிவாக கூறப்பட்டுள்ள 29 கடமைகளை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முடிவெடுக்க அதிகாரம் தரப்பட்டன. முடிவுகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தளவில் அவற்றின் பணி

முன்பிருந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தது. இவைகள் அந்த அந்த மாநிலங்களின் பிரதிநிதிகளாக செயல்பட வேண்டும்.
பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுடைய அதிகாரங்கள் பணிகள் எல்லாம் இந்த பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் தெளிவாக எடுத்து சொல்லப்பட்டு இருக்கின்றன.

## தமிழ்நாட்டில் பங்சாயத்து ராஜ் அமைப்பு முறை

73-வது அரசியலமைப்பு திருத்த சட்ட அடிப்படையில் தமிழ்நாட்டு அரசாங்கம் , தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1994ஐ இயற்றியது.
இச்சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் தற்போது பஞ்சாயத்து அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. 12619 - கிராம பஞ்சாயத்துக்கள்
2. 385 - ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும்
3. 29 - மாவட்ட பஞ்சாயத்துக்களும் உள்ளன.

இவ்வமைப்புகள் தற்போது முழுவீச்சில் பணியாற்றி வருகின்றன. மக்கள் பிரதி நிதிகள் அவர்களின் பகுதி மற்றும் சமுதாயம் தொடர்புடைய ஒவ்வொரு செயலிலும் தீவிர ஈடுபாடு கொண்டு செயலாற்றுகிறார்கள்.

## மக்களின் அதிகாரம்

பஞ்சாயத்து ராஜ் சட்டம் கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள மக்களுக்கு ஒரு தனிச் சிறப்பான அதிகாரத்தை வழங்கியுள்ளது. அது கிராம சபை எனும் சக்தி. சட்டத்தை இயற்றும் அதிகாரமிக்க சட்டமன்றங்களிலும் நாடாளுமன்ற அவைகளிலும் உறுப் பினர்கள்தான் விவாதிக்க முடியுமே தவிர, குடிமக்கள் அவற்றில் பங்கேற்க முடியாது. ஆனால், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கேள்வி கேட்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்கியுள்ளது பஞ்சாயத்து ராஜ் சட்டம். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டு மல்ல, செய்த வேலைகளை, செய்யவுள்ள வேலைகளையும் பரிசீலனைக்கு உட்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

கிராமத்தில் செய்யப்படும் ஒவ்வொரு ரூபாய் செலவும் கிராம சபையால் அங்கீ கரிக்கப்பட வேண்டும். செய்யப்பட்ட, செய்யப்படும் ஒவ்வொரு வேலையும், திட்டமும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமது பஞ்சாயத்துப் பகுதியில் மக்களுக்காக என்னென்ன புதிய திட்டம் தேவை, என்னென்ன வேலைகள் வேண்டும் என்றெல்லாம் கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்ற முடியும். அவற்றைச் செய்யுமாறு ஊராட்சி ஆணையரையும், மாவட்ட ஆட்சியரையும் கேட்க முடியும். ஏன்

செய்து தரவில்லை என்று காரணமும் கேட்க முடியும். அவர்களும் விளக்கம் அளித்தாக வேண்டும். இத்தகைய அதிகாரங்களைக் கொண்டிருக்கும் கிராம சபை அதைவிட உச்சமாக ஊராட்சி மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது.

### குடவோலை முறை

**குடவோலை** என்பது கிராம நிர்வாக சபை உறுப்பினரை தேர்ந்து எடுக்க பழங்காலத்தில் பயன்பட்ட தேர்தல் முறை. இந்த முறையில் கிராமத்தின் பகுதி வாரியாக மக்கள் கூடி, தகுதியான உறுப்பினர்கள் பெயர்களை ஓலைச்சுவடிகளில் எழுதுவார்கள். பிறகு அதை மொத்தமாகக் கட்டி, ஒரு பானையில் போட்டு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுப்பார்கள்.

குடவோலை முறை 9வது நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை நடைமுறையில் இருந்தது. இதற்கான ஆதாரமாக கி.பி. 907 முதல் 955 வரை ஆண்ட மன்னன் முதலாம் பராந்தகன் காலத்திய மூன்று கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இதில் இரண்டு உத்தரமேரூரிலும், மற்றொன்று தஞ்சைப் பள்ளிப்பாக்கம் கிராமத்திலும் கிடைத்துள்ளன.

குற்றமற்றோரையும் தகுதியுள்ளோரையும் மட்டுமே தேர்தலில் நிற்கச் செய்தார்கள். அவர்கள் பெயர்களை ஓலைகளில் எழுதி மக்கள் எதிரில் அவற்றைக் குடத்தில் இட்டுக் குலுக்குவார்கள். பின்னர், சிறு பிள்ளையைக் கொண்டு ஓர் ஓலையை எடுக்கச் செய்து அதில் வரும் பெயருடைய நபரையே தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கொண்டு போட்டி பூசலின்றி தேர்தல் நடந்தது.

குடவோலை தேர்தல் விதிமுறைகளையும், வேட்பாளர்களின் தகுதி மிகக் கடுமையான விதிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டதையும் மிகவும் விரிவாகத் தெரிவிக்கும் கல்வெட்டு தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டு.

## வேட்பாளராகத் தகுதி உடையவர்

- கால் நிலத்துக்கு மேல் அரை நிலம் உடையவர்
- தனது மனையிலேயே அகம் எடுத்துக்கொண்டுள்ளவர்.
- வயது வரம்பு : 70 வயதிற்குக் கீழே 35 வயதிற்கு மேலே
- மந்திர பிராம்மணம் வல்லான்
- ஓதுவித்தறிவான் அல்லது அரைக்கால் நிலே உடையான் எனினும் ஒரு வேதம் வல்லான்
- அவர்களிலும் காரியத்தில் நிபுணனாக இருக்க வேண்டும்
- ஆசாரம் உடையான்

- பொருள் சுத்தம் மனச் சுத்தம் உடையான்.

## வேட்பாளராகத் தகுதி அற்றோர்

- வாரியங்களுக்குக் கணக்கு காட்டாது இருந்தவன் (மற்றும் இவனுக்கு சிற்றவை பேரவை மக்கள், அத்தை மாமன் மக்கள், தாயோடு உடன்பிறந்தான், தந்தையோடு உடன் பிறந்தான், உடன் பிறந்தான், பிள்ளை கொடுத்த மாமன், ..என்று பல உறவு முறையிலும் தொடர்பிலும் வருவோரும் தகுதி இழக்கின்றனர்)
- கையூட்டு செய்தவன்
- பாதகம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனவன்
- பிறரின் பொருள் பறித்தோன்

சிறுபிள்ளையால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் பெயர் எழுதப்பட்ட ஓலையை நடுநிலையாளர் கையில் வாங்கும் பொழுது ஐந்து விரலும் நீட்டியபடி அகலமாக வைத்து உள்ளங்கையில் வாங்க வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொண்ட ஓலையை வாசித்து, மற்றவர்களும் வாசிக்கும்படியும் விதிகள் அமைக்கப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்டவர் பதவிக்காலத்தில் (ஓராண்டு) இடையில் தவறு செய்தால் உடனே பதவியிலிருந்து விலக்கக் கூடிய நடைமுறை அமைந்திருந்ததையும் உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.





**காந்திஜியின் கொள்கை**

இந்தியப் பஞ்சாயத்து ராஜ் சட்டம் ஏப்ரல் 24, 1993 முதல் அமலுக்கு வந்தது. அதற்கு முன்னரே பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே கிராம நிர்வாகத்துக்காக ஜனநாயகப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் கிராமசபைகள் இருந்தன. 1950 இந்திய அரசியல்சட்ட வரைவுக்குழு ஓரளவு அதிகாரம் கொண்ட கிராமப்பஞ்சாயத்துக்களை அமைக்க ஆவனசெய்தது. அதன் பின் பல சிறிய சட்டத் திருத்தங்களுடன் கிராமப்பஞ்சாயத்துக்கள் தேர்தல்கள் மூலம் அமைக்கப்பட்டன. ஆனால் இவையெல்லாமே உண்மையான நிதியாதராமோ, நிர்வாக அதிகாரமோ இல்லாதவை. அரசாங்கத்தின் அடிப்படை அலகான கிராமநிர்வாகத்துக்கு உதவக்கூடியவை மட்டுமே.

அரசியல்சட்ட நிர்ணயசபை விவாதங்களில் காந்தியவாதிகளான மகாவீர் தியாகி போன்றவர்கள் பஞ்சாயத்து அமைப்பின் தன்னாட்சி உரிமைக்காக கோரியபோது அக்கோரிக்கையின் முதல் எதிரியாக அம்பேத்கார் இருந்தார். இந்தியக்கிராமங்கள் சாதிவெறியிலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிக்கிடப்பவை என்று குற்றம்சாட்டிய அம்பேத்கார் அவை இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும்தடையாக அமையும் என்றார். கிராம சுயராஜ்யம் என்பது கிராமங்களில் உள்ள சாதிவெறி கொண்ட நிலக்கிழார்களுக்கு அதிகாரம் வழங்குவது மட்டுமே என்றார்.

வலுவான மைய அதிகாரத்தின் ஆட்சி ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றாகவேண்டும் என்றும், அதன்மூலம் கிராமங்களின் சுய அதிகாரத்தின் முதுகெலும்பு முறிக்கப்படவேண்டும் என்றும், அம்பேத்கார் சொன்னார். இந்தியாவை தொழில்மயமாக்கியும் நகர்மயமாக்கியும் முன்னேற்றப்பாதையில் கொண்டுவர வேண்டும் என்றார். ஆனால் காந்தியவாதிகளின் தொடர் மன்றாட்டு காரணமாகவும் நிலவருவாய் சார்ந்த நிர்வாகத்தில் கிராமபஞ்சாயத்து என்பது ஒரு நடைமுறைத்தேவையாக இருந்தமையாலும் பஞ்சாயத்து அமைப்பு கொண்டுவரப்பட்டது.

ஒருவகையில் அம்பேத்கார் சொன்னது உண்மை. சென்னையில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரியான த்ரென்ஹ்மீர், எம்.சி.ராஜா போன்றவர்களின் அறிக்கைகளையும் உரைகளையும் இன்று வாசிக்கும்போது முழுக்க முழுக்க நில உரிமையாளர்கள் அடங்கிய, அவர்களின் நலனுக்காகவே செயல்பட்ட அமைப்புகளாகவே அக்காலத்து கிராமசபைகள் இருந்திருப்பது தெரியவருகிறது. தலித்துக்கள் போன்ற நில அடிமைகள் விடுதலை பெறுவதற்கான எல்லா வழிகளையும் கிராமசபைகள் அடைத்தும் வந்திருக்கின்றன. ஆகவே அன்றிருந்தநிலையில் அவற்றை அப்படியே சுயமாக விடுவது நல்லதல்ல என்பது உண்மைதான்.

ஆனால் அம்பேத்கார் காண மறந்தது ஒன்றுண்டு. அரசின் நிர்வாக அலகாக கிராமத்திற்குச் செல்லும் அதிகாரியும் சாதிய நோக்கு கொண்டவனாக இருக்கலாம் என்பதுதான் அது. அவனுக்கு கிராமம் மீது கட்டற்ற அதிகாரத்தை அளிக்கிறது அம்பேத்காரின் மைய நிர்வாக முறை. அவன் அங்கே சர்வவல்லமை பொருந்திய அரசின் பிரதிநிதியாக இருக்கிறான். கடந்த ஐம்பதாண்டுகளில் கிராமங்களை நிர்வாகம்செய்யும் அரசாங்க அதிகாரிகள் பழைய நிலப்பிரபுக்களை விட ஆபத்தான எதிர்ச்சக்திகள் என்பது நிரூபணமாகியிருக்கிறது.

ஆனால் அம்பேத்கார் கணித்ததற்கு நேர்மாறாக பலவீனமாக இருந்தாலும் பஞ்சாயத்துமுறையில் இருந்த ஜனநாயகம் கிராமங்களின் சாதியக்கட்டமைப்பைத் தகர்க்க ஆரம்பித்தது. பெரும்பாலானகிராமங்களில் பெரும்பான்மையினராக இருப்பவர்கள் நிலமில்லா மக்களே. வயதுவந்தோர் வாக்குரிமை அவர்களை

அதிகாரம் கொள்ளச் செய்தது. நிலஉடைமையாளர்கள் வாக்குகளுக்காக சேரிகளுக்குச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இக்காரணத்தால் இந்தியாவில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் மட்டும் அதிகமான வன்முறையையும் அமைதியின்மையையும் உருவாக்கக்கூடியனவாக இருந்தன. அந்த வன்முறை ஒரு வலுவான தடுப்புமருந்து உடலுக்குள் செல்லும்போது உருவாகும் காய்ச்சல் போன்றது.

காந்திய வழிமுறைகளின் ஆகச்சிறந்த விளைவாக இந்தியாவில் சுட்டிக்காட்டப் படுவது 'அமுல்'. விவசாயிகளின் சிறு சிறு கூட்டமைப்புகளாக காந்திய முறையில் 1946ல் காந்தி உயிருடன் இருக்கும்போதே ஆரம்பிக்கப்பட்டது அந்த அமைப்பு. குஜராத்தில் கைரா என்ற மாவட்டத்தில் இருந்த மேய்ப்பர்கள் தங்கள் பொருட்களுக்கு போதிய விலைகிடைக்கவில்லை என்று மனக்குறையுடன் தங்கள் தலைவரும் காந்தியவாதியுமான திருபுவன் தாஸ் பட்டேல் என்பவரின் தலைமையில் வல்லபாய் பட்டேலை தொடர்பு கொண்டார்கள். வல்லபாய்பட்டேல் காந்தியவழிமுறைகளின்படி விவசாயிகள் இணைந்து பால்விற்பனைக்கான கூட்டமைப்பை உருவாக்க ஆலோசனைசொல்லி தன் அரசியல் மாணவரும் காந்தியவாதியுமான மொரார்ஜி தேசாயை அந்த செயல்பாட்டை ஒருங்கிணைக்கும்படி ஆணையிட்டார்.

மொரார்ஜி தேசாயின் வழிகாட்டலில் முழுக்கமுழுக்க காந்திய முறைப்படி சிறிய சிறிய மேய்ப்பர்களின் கிராகசபைகளாக பால்கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டு ஒருங்கிணைக்கபப்ட்டன. அந்த இயக்கம் குஜராத் முழுக்க பரவி குஜராத்தின் தலையெழுத்தையே மாற்றியமைத்தது. பிற்காலத்தில் அமுல் நிறுவனத்தின் வெற்றிகள் அனைத்துக்கும் காரணமாக அமைந்த வி.குரியன் அதில் பொறுப்புக்கு வந்தார். ஆனந்த் என்ற ஊரில் பால்கூட்டுறவு சங்கங்களின் தலைமையகம் அமைந்தது. அரைநூற்றாண்டில் அமுலின் வரலாறு ஒரு மாபெரும் வெற்றிக்கதை. இந்தியா முழுக்க பால் உற்பத்தியை தன்னிறைவு கொள்ளச்செய்தது அமுலின் முன்னுதாரணம்தான். கிட்டத்தட்ட மூன்றுகோடி மேய்ப்பர்கள் இணைந்துள்ள அமுல் உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி-வணிக நிறுவனங்களில் ஒன்று.

**வினோபா**

## சர்வோதய சமாஜம்

1948 மார்ச்சில் காந்திஜியின் சீடர்கள் சேவாகிராமத்தில் ஒன்றுகூடி 'சர்வோதய சமாஜம்' என்ற அமைப்பை உருவாக்கினார்கள். தேசப் பிரிவினையால் புண்பட்ட மக்களின் மனப் புண்களை ஆற்றவும் மக்களுக்குத் தேவைப்படும் கல்வி, தொழில், சுகாதாரம் ஆகியவற்றை அளிக்கவும் சர்வோதயத் தொண்டர்கள் புறப்பட்டனர். தங்கம், பணம் ஆகியவற்றைச் சம்பாதிக்கும் ஆசையை மக்கள் துறக்க வேண்டும்

என்பதற்காக 'காஞ்சன் முக்தி'என்ற இயக்கத்தை வினோபா பாவே 1950-ல் தொடங்கினார்.

## பூதான இயக்கம்

1951-ல் தெலங்கானா பகுதியில் போச்சம்பள்ளியில் அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வந்த தாழ்த்தப்பட்ட மக்களிடம், அவர்களின் முக்கியத் தேவை என்ன என்று வினோபா கேட்டார். விவசாயம் செய்யத் தங்களுக்கு 80 ஏக்கர் நிலம் வேண்டும் என்றார்கள். "இதற்கு உங்களுடைய பதில் என்ன?" என்று கிராமத்தாரிடம் கேட்டார் வினோபா.

"என்னுடைய 100 ஏக்கர் நிலத்தைத் தருகிறேன்" என்று ராமச்சந்திர ரெட்டி என்ற நிலச்சுவான்தார் அறிவித்தார். வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்த வினோபா பாவே 'பூமிதான இயக்க'த்தைத் தொடங்கினார். எதிர்பாராத வகையில், அன்றாடம் 200 ஏக்கர் முதல் 300 ஏக்கர் வரையிலான நிலங்கள் தானமாகக் கிடைத்தன. உத்தரப் பிரதேசத்தின் மங்ராத் என்ற கிராம மக்கள் தங்களுடைய முழு கிராமத்தையே கிராமதானமாகக் கொடுத்தனர்.

வினோபாஜி நாடு முழுக்க நடந்து 41,94,271 ஏக்கர் நிலங்களைத் தானமாகப் பெற்றார். அதில் 12,85,738 ஏக்கர் நிலங்கள் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. 18,57,398 எதற்கும் பயன்படாத களர் நிலங்களாக இருந்தன. எஞ்சியவை மீது தானம் கொடுத்தவர்களின் வாரிசுகள் வழக்கு போட்டதால் முடிவு காணப்படாமல் போய்விட்டது.

காற்று, தண்ணீர், வானம், சூரிய ஒளி போல நிலமும் இயற்கையின் கொடை. அதைத் தனிப்பட்ட நபர்கள் பேரில் சொந்த சொத்தாக அனுபவிப்பது கூடாது என்ற உயரிய நோக்கத்தை 'பூமிதானம்' வலியுறுத்தியது. 'காந்தியம்' என்பது கம்யூனிஸத்தின் அகிம்சை வடிவம் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு.

சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்கள்கூட வினோபாஜியை நடைப்பயணத்தின்போது சந்தித்து, தங்களுடைய ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரண் அடைந்தார்கள். சிறையில் தண்டனையை அனுபவித்துவிட்டு வந்து ஆசிரமத்தில் தங்களுக்கிடும் பணியைச் செய்வதாகக் கூறிச் சென்றார்கள்.

காந்தியத்தின் வலிமை இதுதான். சத்தியத்தின் முன் எந்த ஆயுதமும் செயலிழந்துதான் போகும்.

## அசோக் மேத்தா

**அசோக் மேத்தா** (24 அக்டோபர் 1911 பாவ்நகர் - 1984) என்பவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சோசலிசஅரசியல்வாதி ஆவார். இவர் இந்திய தேசிய காங்கிரசின் ஒரு சோசலிச பிரிவான காங்கிரஸ் சோசலிச கட்சியை உருவாக்க உதவினார். மேலும் இவர் பம்பாய் நகரத்தின் அரசியலிலும் நிர்வாகத்திலும் மிகுதியான ஆர்வமிக்கவராக இருந்தார்.

## பணிகள்

1932 இல் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டதற்காக இவர் சிறையில் அடைக்கப்பட்டார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மேத்தா தீவிரமாக ஈடுபட்டு கைது செய்யப்பட்டார். இதுபோன்ற இவரது செயல்பாடுகளால் இவருக்கு ஐந்து முறை கடுஞ் சிறைதண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, இவர் பம்பாயில் தொழிற்சங் கங்களை ஒழுங் கமைப்பதில் ஈடுபட்டார். மேலும் இவர் ஐ.என்.டி.யூசி தொழிற் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவராவார்.

1946 முதல் 1947 வரை பம்பாய் நகரின் மேயராக பணியாற்றினார். 1950 களின் துவக்கத்தில் தீவிர அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற மேத்தா, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனது அனுபவங்களையும், சோசலிச சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் குறித்தும் பல நூல்களை எழுதினார். 1950 இல், இவர் சோசலிச கட்சியின் எட்டாவது அமர்வின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அசோக் மேத்தா சோசலிச கட்சியின் நிறுவனர் உறுப்பினர் ஆவார். 1952 செப்டம் பரில், கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி ஆகியவை இணைந்து பிரஜா சோசலிச கட்சியாக (PSP) உருவானது. இந்த இணைப்பில் முதன்மையான பாத்திரத்தைராம் மனோகர் லோகியா மற்றும் மேத்தா ஆகியோர் வகித்தனர். அசோக மேத்தா புதிய கட்சியின் பொதுச் செயலாளராக ஆனார். இவர் 1959-1963 ஆண்டு காலகட்டத்தில் பிரஜா சோசலிசக் கட்சியின் தலைவராக இருந்தார்.

பயன்பாட்டுப் பொருளாதார ஆய்வுக்கான தேசிய பேரவை (என்சிஏஇஆர்) என்ற உயர் ஆய்வு மையத்தை தில்லியில் நிறுவினார். இது இந்தியாவில் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதற்காக உருவான முதல் சுதந்திர அமைப்பாக இது 1956இல் நிறுவப்பட்டது. இவர் 1963 இல், மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவராக பணியாற்றினார். 1964 இல் மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். பிராஜா சோசலிச கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் இவர் 1964 இல் இந்திய தேசிய

காங்கிரசில் சேர்ந்தார். 1969 இல் காங்கிரசானது காங்கிரஸ் (இ) என்றும் ஸ்தபன காங்கிரஸ் என இரண்டாக பிளவு பட்டபோது இந்திரா காந்திக்கு எதிரான பிரிவான ஸ்தாபனா காங்கிரசில் தங்கிவிட்டார்.

இவர் 1954-1957 மற்றும் 1957-1962 காலகட்டத்தில் முதலாவது மற்றும் இரண்டாவது மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நான்காவது மக்களவைக்கு 1967-1971 காலகட்டத்தில் பண்டாராவில் தொகுதியில் இருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 3 ஏப்ரல் 1966 முதல் 26 பிப்ரவரி 1967 வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார்.

1975 ஆம் ஆண்டு சூன் 26 ஆம் நாள் நெருக்கடி நிலையின் போது கைது செய்யப்பட்ட இவர், அரியானாவின் ரோக்தாக் சிறையில் அடைக்கப்பட்டார்.

பஞ்சாயத்து ராஜ் குறித்து ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைக்க 1977இல் ஜனதா அரசு அமைத்த குழுவின் தலைவராக அசோக் மேத்தா இருந்தார்.

1984 இல் அவர் இறந்தார்.

**இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள்**(Five-Year Plans of India) என்பது 1947-2017 வரையில் இந்தியப் பொருளாதாரமானதுதிட்டமிடலை அடிப்படையாகக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுஐந்தாண்டுத் திட்டங்களாகப்பகுக்கப்பட்டு திட்டக் குழு (இந்தியா) (1947-2014) மற்றும் நிதி ஆயோக் (2014-2017) மூலம் வடிவமைக்கப்பட்டும், செயல்படுத்தப்பட்டும், மேற்பார்வையிடப்பட்டு வந்தது.

நரேந்திர மோதி தலமையிலான ஆட்சி 2014 இல் அமைந்தவுடன் **இந்திய ஐந்தாண்டு திட்டங்கள் - திட்ட கமிசன்** கலைத்து விட்டு புதிய அமைப்பாகநிதி ஆயோக் உருவாக்கப்பட்டது.

### முதல் ஐந்தாண்டு திட்டம் - 1951-56

இந்திய அரசு, தனது முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், உணவு உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது.விவசாயம் மற்றும் சமுதாய மேம்பாடு, பாசனம் மற்றும் மின்னுற்பத்தி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத் துறை, சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவதே முதல் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

### இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் 1956-61

கிராமப் புற இந்தியாவை சீரமைத்தல், தொழில் துறை வளர்ச்சிக்கான அடிக்கல்லை நாட்டுதல், பின்தங்கிய மக்களின் வளர்ச்சிக்காக அதிகபட்ச வாய்ப்புகளை உருவாக்குதல் மற்று நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஒரே சீராக வளர்ச்சி அடைவதை உறுதிசெய்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாக இருந்தன.

### மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் - 1961-66

முதல் மற்றும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களின் நீட்சியாக இத்திட்டம் அமைந்தது. மேலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நோக்கி இந்திய மக்களை இட்டுச்செல்லும் வழிகாட்டியாகவும் இது அமைந்தது.

## நான்காவது ஐந்தாண்டு திட்டம்-1969-74

மக்களின் வாழ்க்கைத் தரத்தை - குறிப்பாக பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை - உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி, ஈட்டப்பட்ட செல்வத்தை மக்கள் அனைவருக்கும் சமமாகப் பிரித்து வழங்குவதும் முதலிடத்தைப் பெற்றன. நாட்டின் செல்வமும்பொருளாதார சக்தியும் சில இடங்களில் மட்டுமே குவிந்திருக்காமல் அவற்றைப் பரவலாக்குவது தலையாய பணி ஆயிற்று.

## ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்-1974-79

உலக அளவில், உணவுப் பொருட்கள், உரம் போன்ற விவசாய இடுபொருட்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் பெரிதும் உயர்ந்தன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது அவசரத் தேவையாக இருந்தது. 1974-75 இன் மத்தியில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பிற நாடுகளின் கவனத்தை ஈர்த்தது.

## ஆறாவது ஐந்தாண்டு திட்டம்- 1980-85

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றைக் களைதல் ஆகியவை இந்த திட்டத்தில் முதலிடம் பெற்றன.

## ஏழாவது ஐந்தாண்டு திட்டம் -1985-89

உணவு தானிய உற்பத்தி, வேலைவாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் மக்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல் போன்றவை முக்கியத்துவம் பெற்றன.

## எட்டாவது ஐந்தாண்டு திட்டம்-1992-97

உணவு உற்பத்தியில் இந்திய நாடு ஏறத்தாழ தன்னிறைவு அடைந்துவிட்டது. தொழில் துறை மற்றும் சேவை வழங்கும் துறைகளும் நன்கு முன்னேறி இருந்தன. ஆனால் நிதிப்பற்றாக்குறை, பொதுக்கடன், நலிந்து வரும் அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் ஆகியவற்றை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியம் உருவாகி விட்டது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்காண்பவை முன்னுரிமை பெற்றன:

1. அதிகமான அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலம் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் முழு அளவு வேலைவாய்ப்பினை எட்டுதல்
2. மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் ஊக்கத்திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகைகளை விளக்கிக்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல்
3. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளித்தல் மற்றூம் 15 முதல் 35 வயது வரை உள்ள மக்களிடத்து காணப்படும் எழுத்தறிவின்மையைப் போக்குதல்

4. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், அடிப்படை மருத்துவ வசதிகளை அளித்தல், நோய் தடுப்பு முறைகளை அளித்தல் மற்றும் தோட்டிப் பணிகளை அற்வே ஒழித்தல்
5. விவசாய வளர்ச்சி, பல்வகைப் பயிர்களைப் பயிரிடல் மற்றும் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு தானிய உற்பத்தியைப் பெருக்குதல்
6. மின்னாற்றல், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் பாசனம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி வளர்ச்சிப் பணிகளைத் தடையின்றி நீடிக்கச் செய்தல்.

## ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் 1997-2002

பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கும் இடையில் உள்ள ஒருங்கிணைந்த உறவை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் அங்கீகரித்தது. காலங் காலமாக நிலவி வரும் சமுதாய வேறுபாடுகளைக் களைந்து ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு ஆதரவு அளிக்கும் கொள்கைகளை உருவாக்குவதில் அரசு உறுதியாக உள்ளது. "சமூக நீதி மற்றும் சமத்துவத்துடன் இணைந்த வளர்ச்சி " என்பதே இத்திட்டத்தின் தாரக மந்திரம்.

தேசிய வளர்ச்சிக் குழு கீழ் காண்பவற்றை ஒன்பதாவது ஐந்தானண்டுத் தித்தின் முக்கிய நோக்கங்கள் எனக் குறிப்பிட்டத

1. வேலை வாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல்
2. விலைவாசிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதே நேரத்தில் வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல்
3. அனைவருக்கும் -குறிப்பாக பின்தங்கிய சமூகத்தினருக்கு - உணவு மற்றும் சத்துணவை உறுதி செய்தல்
4. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் , அடிப்படை சுகாதார வசதிகள், அடிப்படைக் கல்வி, தங்குமிடம் ஆகியவற்றை குறித்த கால வரையறைக்குள் உறுதி செய்தல்
5. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
6. அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் மூலம் வளர்ச்சிப் பணிகளின் காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் காத்தல்
7. பெண்கள் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய - அட்டவணை இன மக்கள்,பிற பின் தங்கிய இனத்தவர்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்குதல்
8. பஞ்சாயத்து ராஜ், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்க ஊக்கப்படுத்துதல்
9. சுய சார்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல்.

## பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் 2002-07

பத்து விழுக்காடு வேகத்தில் உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியப் பொருளாதாரத்தை மாற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலீட்டாளர்களுக்கு இணக்கமான சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சிக்கு சாதகமான சூழ் நிலையை உருவாக்குதல் ஆகியவை முன்னுரிமை பெற்றன. தனியார் துறையினர், பொருளாதார வளர்ச்சியில் துடிப்புடன் பங்கேற்பதையும் நிதித்துறையில் வெளி நாட்டினர் அதிக அளவில் பங்கேற்பதையும் அரசு வரவேற்றது. வர்த்தக நிறுவனங்கள் வெளிப்படையுடன் செயல்படுவதற்கும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் அதிக ஊக்கம் அளிக்கப்பட்டது. வறுமையை ஒழித்தல்,கல்வியைப் பரப்புதல் ஆகியவை அதிக கவனம் பெற்றன. 2007 ஆம் ஆண்டு வாக்கில் வனப்பரப்பை 25 விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல்; அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்குதல்

## கண்காணிக்கத் தக்க இலக்குகள்

1. வறுமையைக் குறைப்பது
2. வேலைவாய்ப்பைப் பெருக்குவது
3. 2007 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வியை எட்டச் செய்வது
4. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 16.2 விழுக்காடாகக் குறைப்பது
5. 2007 ஆம் ஆண்டுக்குள் கல்வி ஏற்றோர் எண்ணிக்கையை எழுபத்தைந்து விழுக்காடாக உயர்த்துவது
6. குழந்தை இறப்பு விகிதத்தை குறைப்பது
7. பேறுகாலத்தில் பெண்கள் இறக்கும் விகிதத்தைக் குறைப்பது
8. வனப் பரப்பை அதிகரிப்பது
9. 2012 ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி செய்தல்
10. மாசு பட்ட அனைத்து ஆறுகளையும் 2007 ஆம் ஆண்டுக்குள் தூய்மைப் படுத்துவது

## பதினோராம் ஐந்தாண்டுத் திட்டம் - 2007 -12

1. மொத்த உள் நாட்டு உற்பத்தியை பத்து விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல்
2. எழு நூறு இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்; ஆரம்பப் பள்ளிகளில் வசதிகளை மேம்படுத்துதல்
3. குழ்ந்தை இறப்பு விகிதத்தை 28 ஆகக் குறைத்தல்; அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்குதல், வனப் பரப்பளவை ஐந்து விழுக்காடு புள்ளி அளவுக்கு உயர்த்துதல்.